# ஒடிஸா மாஸ்டர்ஸ்: சதீஷ் குமார் சாம்பியன்

கட்டக், டிச. 17: ஒடிஸா மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டி ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சதீஷ்குமார் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் தனிஷா–துருவ் கபிலா பட்டம் வென்றனர்.

ஒடிஸாவின் கட்டக் நகரில் ஒடிஸா மாஸ்டர்ஸ் 100 சூப்பர் பாட்மின்டன் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் இறுதி ஆட்டங்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சதீஷ்குமார்–ஆயுஷ் ஷெட்டி மோதினர். 22 வயதான சதீஷ் கடும் போராட்டத்துக்கு பின் 21–18, 19–21, 21–14 என்ற கேம் கணக்கில் ஆயுஷ் ஷெட்டியை வீழ்த்தி பட்டம் வென்றார். சதீஷ்குமார் இண்டியா இன்டர்நேஷனல் போட்டியில் பட்டம், மாலத்தீவு சர்வதேச போட்டியில் ரன்னர் இடத்தைப் பெற்றிருந்தார்.



தனிஷா–துருவ்



சதீஷ் குமார், ஆயுஷ் ஷெட்டி

**தனிஷா–துருவ் சாம்பியன்:** கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் தனிஷா கிரஸ்டோ–துருவ் கபிலா இணை அபாரமாக ஆடி 17–21, 21–19, 23–21 என்ற கேம் கணக்கில் சிங்கப்பூரின் ஹீ–டேன் இணையை வீழ்த்தி பட்டம் வென்றனர்.

# சூரத் வைர வர்த்தக மையம்: உலகின் மிகப்பெரிய அலுவலக வளாகம்

குஜராத் மாநிலம், சூரத்தில் 67 லட்சம் சதுர அடிக்கும் மேற்பட்ட பரப்பில் கட்டடப்பட்டுள்ள 'சூரத் வைர வர்த்தக மையம்' உலகின் மிகப் பெரிய அலுவலக வளாகம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

சூரத் வைர ஆய்வு மற்றும் வர்த்தக நகரம் (ட்ரீம் சிட்டி) திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட இந்த பிரம்மாண்ட மையம், தலா 15 தளங்களுடன் 9 உயர் கட்டடங்களை உள்ளடக்கியதாகும். பல்வேறு அளவுகளில் சுமார் 4,500 வைர வர்த்தக அலுவலகங்கள் அமைந்துள்ளன.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான சுங்க அனுமதி அலுவலகம், சில்லறை நகை வர்த்தகத்துக்கான வளாகம், சர்வதேச வங்கி வசதிகள், பாதுகாப்புப் பெட்டகங்கள் உள்ளிட்டவையும் இடம் பெறுள்ளன.



சூரத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த வைர வர்த்தக வளாகம்.

அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை தலைமையகமான 'பென்டகன்' கட்டடமே, இதற்கு முன் உலகின் மிகப் பெரிய அலுவலக வளாகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒரே நேரத்தில் 4 இலக்குகளைத் தாக்கிய ‘ஆகாஷ்’ ஏவுகணை

KUMAR MAYILSAMY

## இந்தியா புதிய சாதனை

**புது தில்லி, டிச. 17:** வானில் 25 கி.மீ தொலைவில் உள்ள 4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கி இந்தியாவின் ‘ஆகாஷ்’ ஏவுகணை புதிய சாதனை படைத்துள்ளதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

இதுதொடர்பாக எக்ஸ் வலைதளத்தில் டிஆர்டிஓ வெளியிட்ட பதிவில், ‘வானில் 25 கி.மீ. தொலைவில் உள்ள 4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கும் ‘ஆகாஷ்’ ஏவுகணை ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. இதன் மூலம் உலகில் முதல்முறையாக இத்திறன் படைத்த ஏவுகணையைக் கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது’ என குறிப்பிட்டனர்.

கடந்த டிசம்பர் 12-ஆம் தேதி நடைபெற்ற ‘அஸ்த்ர சக்தி’ ராணுவ பயிற்சியின்போது ஆகாஷ் ஏவுகணை சோதனை செய்யப்பட்டது. இப்பயிற்சியை இந்திய விமானப் படையினர் மேற்கொண்டனர்.

தரையிலிருந்து வானில் 25 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஆகாஷ் ஏவுகணை, அதிக பாதிப்புகள் ஏற்படக்கூடிய பகுதிகளை பாதுகாப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் நட்புறவு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ராணுவ தளவாடங்களில் ‘ஆகாஷ்’ ஏவுகணை முக்கிய பங்கு வகிக்கிறது. பிரமோஸ் ஏவுகணை, டோர்னியர்-228 விமானம் உள்ளிட்டவை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மற்ற ராணுவ தளவாடங்கள் ஆகும்.

https://t.me/dinamanihighlights

# ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் செய்வோர் 65% அதிகரிப்பு

## மத்திய நிதியமைச்சகம்

**புது தில்லி, டிச.17:** ஐந்து ஆண்டுகளில் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) கணக்கு தாக்கல் செய்வோரின் எண்ணிக்கை 65 சதவீதம் அதிகரித்துள்ளது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

KUMAR MAYILSAMY

கடந்த 2017-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி ஜிஎஸ்டியை மத்திய அரசு அமல்படுத்தியது. இந்நிலையில், மத்திய நிதியமைச்சகம் 'எக்ஸ்' தளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவு:

ஜிஎஸ்டி விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டதன் விளைவாக, தகுதிவாய்ந்தவர்கள் ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் செய்யும் விகிதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஏப்ரல் வரையிலான 5 ஆண்டுகளில், ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் செய்வோரின் எண்ணிக்கை 1.13 கோடியாக சுமார் 65 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த 2018-ஆம் ஆண்டு ஏப்ரலில் ஜிஎஸ்டியின் கீழ் பதிவு செய்து வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 1.06 கோடியாக இருந்தது.

இது நிகழாண்டு ஏப்ரல் நிலவரப்படி 1.40 கோடியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://t.me/dinamanihighlights

# பேரிடா சூழலகளுககு பிரத்யேக ஆம்புலன்ஸ்

## ‘108’ நிர்வாகம் வலியுறுத்தல்

**சென்னை, டிச. 17:** வெள்ளத்தின் போது நோயாளிகளை மீட்டு மருத்துவமனையில் சேர்க்க படகு ஆம்புலன்ஸ்களை வாங்க தமிழக அரசுக்கு ‘108’ ஆம்பு லன்ஸ் நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் இ.எம்.ஆர்.ஐ. கிரீன் ஹெல்த் சர்வீஸ் நிறுவ னம் மூலமாக ‘108’ ஆம்புலன்ஸ் சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தம் 1,300-க்கும் மேற் பட்ட ஆம்புலன்ஸ்கள் இயக் கப்படுகின்றன. 5 ஆயிரத்துக் கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை மற்றும் திரு வள்ளூர் மாவட்டங்களைப் பொருத்தவரை 200-க்கும் மேற் பட்ட வாகனங்கள் இயக்கப்ப டுகின்றன. அவசர கால கட்டுப் பாட்டு மையத்துக்கு தின மும் 15,000-க்கும் அதிகமான அழைப்புகள் வருகின்றன.

இந்த நிலையில், அண்மை யில் ஏற்பட்ட மிக்ஜம் புயல் மற்றும் பெரு மழையின்போது பாதிக்கப்பட்ட சென்னை உள்பட 4 மாவட்டங்களிலும் 500-க்கும் மேற்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் மீட்கப் பட்டனர்.

குறிப்பாக 130 கர்ப்பிணிகள் மீட்கப்பட்டு மருத்துவமனைக ளில் சேர்க்கப்பட்டனர். வெள் ளம் சூழ்ந்த பகுதிகளில் ஆம் புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாது என்பதால், செயற் கையாக தயாரிக்கப்பட்ட தற் காலிக படகு மூலம் நோயாளி கள் அழைத்து வரப்பட்டதாக ‘108’ ஆம்புலன்ஸ் நிர்வாகம் தெரிவித்தது.

இந்த நிலையில், சென்னை யில் பேரிடர் பாதிப்புகள் நேரி டும்போது வெள்ளத்திலிருந்து நோயாளிகளை மீட்க படகு ஆம்புலன்ஸ்களை வாங்கும் படி ‘108’ ஆம்புலன்ஸ் நிர்வா கம் வலியுறுத்தியுள்ளது. அதன் படி முதல்கட்டமாக இரு பட குகள் வாங்குவதற்கான பரிந்து ரையை முன்வைக்க உள்ளதாக 108 ஆம்புலன்ஸ் சேவை நிர்வா கிகள் தெரிவித்துள்ளனர்.

**தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**

*காலந்தாழ்த்திச் செய்யத் தக்கவற்றைக் காலந் தாழ்ந்தே செய்ய வேண்டும்; காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக் கூடாது.*

**திருக்குறள் (எண்: 672) *அதிகாரம்: வினை செயல்வகை***

# 'ஒரே நாடு ஒரே தேர்தல்': இன்று கூடுகிறது ராம்நாத் கோவிந்த் குழு

**புது தில்லி, டிச.17:** மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குடியரசு முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழு, திங்கள்கிழமை இரண்டாவது முறையாக கூட உள்ளது.

இந்தக் கூட்டத்தில், விவாதிக்கப்படவுள்ள விஷயங்கள் குறித்து எழுத்துபூர்வ தீர்மானங்கள் எதுவும் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்படவில்லை என்றபோதும், ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக அரசியல் கட்சிகளிடமிருந்த பெறப்பட்ட கருத்துகள் மீது விவாதம் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம் தில்லியில் அண்மையில் நடைபெற்றது.

அப்போது, நாட்டில் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகள், மாநிலங்களில் ஆட்சியில் உள்ள கட்சிகள், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகள், இதர அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளை அழைத்து யோசனைகள் மற்றும் கருத்துகள் கேட்கவும் சட்ட ஆணையத்திடமும் யோசனைகள் மற்றும் கருத்துகள் பெறவும் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

# போக்குவரத்துக் கழகங்களுக்கு 38,000 பயணச்சீட்டு கருவிகள்

## எஸ்பிஐ வழங்க ஏற்பாடு

**சென்னை, டிச. 17:** போக்குவரத்துக் கழகங்களுக்கு 38,000 பயணச்சீட்டு கருவிகளை பாரத ஸ்டேட் வங்கி இலவசமாக வழங்கவுள்ளது.

தமிழகம் முழுவதும் 8 போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 20,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்தப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு மின்னணு முறையில் பயணச்சீட்டு வழங்கும் முறை பல ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் 2011-ஆம் ஆண்டு மத்திய அரசின் நிதியுதவிடன் ரூ. 20 கோடியில் அதிநவீன பயணச்சீட்டு கருவிகள் வாங்கப்பட்டன. ஆனால் இந்தக் கருவிகளில் பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகளும், சிக்கல்களும் இருந்ததால், அவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டு சரி செய்யப்பட்டன. இருப்பினும், கடந்த 3 ஆண்டுகளில் இக்கருவிகள் அனைத்தும் படிப்படியாக திரும்பப் பெறப்பட்டன.

இந்த நிலையில், பயணச்சீட்டு கருவியை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை போக்குவரத்துத் துறை தற்போது தீவிரப்படுத்தியுள்ளது.

இது குறித்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியது:

ஒரே அட்டையைப் பயன்படுத்தி பொதுப் போக்குவரத்து வாகனங்கள் அனைத்திலும் பயணம் செய்யும் முறையை கடந்த ஆண்டு மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த அட்டையை பிரபலப்படுத்த மத்திய அரசு முனைப்பு காட்டி வரும் நிலையில், இதைப் பயன்படுத்த வேண்டுமானால் பொது போக்குவரத்தில் பயணச்சீட்டு கருவியின் பயன்பாடு அவசியமாக உள்ளது.

இந்த நிலையில், போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான 38,000 பயணச்சீட்டு கருவிகளை பாரத ஸ்டேட் வங்கி இலவசமாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த பயணச்சீட்டு கருவிகள் சென்னை விரைவு போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் சோதனை முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கருவிகள் வெற்றியடையும் பட்சத்தில் அனைத்து பேருந்துகளுக்கும் இந்தப் பயணச்சீட்டு கருவியை வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கும்.

இவ்வாறு கருவிகளை பெறும் போது அதற்கான சர்வர், காகித பயன்பாடு மட்டுமே போக்குவரத்துக் கழகங்களுக்கான செலவினங்களாக இருக்கும் என்றனர்.

# சென்னையை அச்சுறுத்தும் 'மீலியாய்டோசிஸ்' தொற்று

## பெரு மழையால் அதிகரிப்பு




### அறிகுறிகள்

- தீவிர காய்ச்சல்
- குளிர் நடுக்கம்
- தலைவலி
- இருமல்
- மூச்சு விடுவதில் சிரமம்
- வயிற்றுப் பகுதி, இடுப்புப் பகுதியில் கட்டி
- பசியின்மை
- எடை குறைப்பு
- கழலைகள் வீக்கம்

### தவிர்ப்பது எப்படி?

- காயங்களுக்கு உடனடி சிகிச்சை அவசியம்
- காயங்களில் மாசுபட்ட நீர் படாமல் பராமரித்தல்
- காலணி அணியாமல் வெளியே செல்லக் கூடாது
- கைகளை அடிக்கடி சோப் மூலம் கழுவ வேண்டும்
- சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
- எதிர்ப்பாற்றலை மேம்படுத்துதல்

சென்னை, டிச. 17: மழைக் காலங்களில் மண்ணிலிருந்து பரவும் 'மீலியாய்டோசிஸ்' எனப்படும் அரிய வகை பாக்டீரியா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உரிய விழிப்புணர்வு இல்லாமல் சிகிச்சையை புறக்கணித்தால் அந்தத் தொற்று முக்கிய உறுப்புகளை செயலிழக்கச் செய்து உயிரிழப்புக்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பெரு வெள்ளம் போன்ற பேரிடர் சூழலுக்குப் பிறகு 'மீலியாய்டோசிஸ்' எனப்படும் பாக்டீரியா தொற்று உருவெடுக்கத் தொடங்குகிறது. இது விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் ஒரு சேர பரவுகிறது. மண்ணுக்குள் பல வகையான பாக்டீரியாக்கள் வியாபித்துள்ளன. அதில் முக்கியமான ஒன்று 'பர்கோல்டெரியா ஸ்யூடோமேய்' எனப்படும் நுண்ணுயிரி. அதன் மூலமாகத்தான் 'மீலியாய்டோசிஸ்' தொற்று பரவுகிறது.

கால்களிலோ, உடலிலோ காயங்கள் இருப்பவர்கள் மாசடைந்த நீரில் நடக்கும்போதும், தரமற்ற குடிநீரை அருந்தும்போதும் 'மீலியாய்டோசிஸ்' தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அதே போன்று அந்த பாக்டீரியாக்கள் பரவியுள்ள காற்றை சுவாசிக்கும்போதும் அந்நோய் ஏற்படலாம்.

ஒருவரது உடலில் பாக்டீரியா கிருமி ஊடுருவிய இரண்டாவது வாரத்திலிருந்து அதன் அறிகுறிகள் தென்படும். அந்த வகையில், சென்னை உள்பட நான்கு மாவட்டங்களில் அண்மையில் பெய்த பெரு மழை மற்றும் வெள்ள பாதிப்புகள், தற்போது 'மீலியாய்டோசிஸ்' தொற்று பரவ காரணமாகியிருக்கிறது.

இதுகுறித்து பொது நல மருத்துவ நிபுணர் அ.ப. ஃபரூக் அப்துல்லா கூறியதாவது:

எந்த இடத்தில் பெரு வெள்ளம்போன்ற பேரிடர் ஏற்பட்டாலும் அங்கு பொது சுகாதார அச்சுறுத்தல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. மாசடைந்த நீருடன் மனிதர்களும், விலங்குகளும் நேரடியாக தொடர்பில் இருப்பதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

அதில் ஒன்றுதான் நாம் அதிகம் கேள்விப்படாத 'மீலியாய்டோசிஸ்' என்ற தொற்று. கரோனா காலத்தில் கருப்புப் பூஞ்சை எனும் 'மியூகார் மைகோசிஸ்' தொற்று பரவியதைப் போன்று, தற்போது 'மீலியாய்டோசிஸ்' தொற்று அதிகமானோருக்கு பரவி வருகிறது.

இந்த பாக்டீரியாக்கள் உடலில் நீண்ட காலம் நிலைத்திருந்து நோய்களை உருவாக்கக் கூடியவை. முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிடில் சிறுநீரகம், கல்லீரல் , நுரையீரல் , எலும்புகள், மூளை போன்ற முக்கிய உறுப்புகள் பாதிப்புக்குள்ளாகும். அதற்கான சிகிச்சையை புறக்கணித்தால் உயிரிழப்பு நேரிட வாய்ப்புள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களுக்கு ஏற்படும் புண்களில் இருந்து வெளியேறும் சீழ், திரவம், ரத்தம் மற்றும் சிறுநீரிலும் நோய்க் கிருமிகள் காணப்படும். இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாக பரவாது என்றாலும், நோய்த் தொற்றுக்குள்ளானவர்கள் விரைந்து சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் பாதிப்பை முழுமையாக குறைக்க முடியும்.

எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், கட்டுப்பாடற்ற சர்க்கரை நோயாளிகள், கல்லீரல், சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்கள், தலசீமியா நோயாளிகள், புற்றுநோயாளிகள், ஹெச்ஐவி நோயாளிகள், நுரையீரல்பாதிப்பு இருப்பவர்களுக்கு 'மீலியாய்டோசிஸ்' தொற்று ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே, இதுகுறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றார் அவர்.